# செய்திகளும் குறிப்புகளும்

25.04.2024, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1053

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)
**15. பகுத்தறிவு கடந்த நலம்**

ஆனால் அவனுடைய நன்னெறி ஜீவனைத் தீர்மானிப்பது கடவுளுடனான அவனுடைய உறவுகள், அவனுடைய இயற்கையில் மறைந்திருப்பதோ அல்லது அவனுடைய உயர் ஆன்மாவில் அல்லது உள்ளார்ந்த தெய்வீகத்தில் உணர்வு நிலையிலுள்ளதோ ஆன இறைவன் அவன்மீது செலுத்தும் உந்துதலாகும். அவன் ஓர் உள்ளார்ந்த இலட்சியத்திற்குக் கீழ்ப்படிகிறான், ஒரு வெளிப்புறத்தரத்திற்கு அல்ல; அவனுடைய ஜீவனிலுள்ள தெய்வீக விதிமுறைக்கு இணங்க நடக்கிறான், ஒரு சமுதாயக் கோரிக்கைக்கோ அல்லது கூட்டுத் தேவைக்கோ அல்ல. நன்னெறியின் கட்டளை அவனைச் சுற்றி இருப்பதிலிருந்து வருவதில்லை; அது அவனுக்குள்ளே இருந்தும் மேலிருந்தும் வருகிறது.

உண்மையின் சட்டங்கள், குறைபாடற்ற நடத்தையின் சட்டங்கள் இவை மனிதனால் உணரப்படுவதற்கும் மற்றும் கீழ்ப்படிவதற்குமென்று வகுக்கப்பட்ட சட்டங்களாகும், இவை கடவுளர்களின் சட்டங்கள், நித்தியமாக எல்லாவற்றுக்கும் அப்பால் உள்ளவை என்று பண்டுதொட்டு உணரப்பட்டும் கூறப்பட்டும் வருகின்றது. பகுத்தறிவுக்காலம் கேள்வி முறையின்றி முடிவு செய்யப்பட்ட இந்த விஷயத்தை மூடநம்பிக்கை அல்லது உலகத்தின் இயல்பும் வரலாறும் மறுதலிக்கும் ஒரு கவிதைக் கற்பனை என்று பரிகசித்தது. ஆனால் இந்தப் பண்டைய மூட நம்பிக்கையில் அல்லது கற்பனையில் ஓர் உண்மையிருக்கிறது, அதைப் பகுத்தறிவின் மறுப்பு தவறவிடுகிறது, மேலும் பகுத்தறிவின் மூலம் இதை உறுதிப்பாடு செய்யும் காண்டின் (kant's) ஆணித்தரமான கட்டளை என்பதோ அல்லது வேறொன்றோ முற்றிலும் மீட்டுத்தர முடியாததாக இருக்கிறது. மனிதனுடைய மனச்சான்று அவனுடைய பரிணாம வளர்ச்சியடைந்துவரும் இயற்கையின் படைப்பு எனின், நன்னெறி விதிமுறை பற்றிய அவனுடைய கருத்துகள் மாறுபாட்டிற்குரியவை, மேலும் அவனுடைய பரிணாமவளர்ச்சிப் படிநிலையைப் பொறுத்ததவை எனில், இன்னமும் அவற்றின் மூலத்தில் அவற்றின் அனைத்து மாறுபாடுகளினூடும் மாறாத ஏதோ ஒன்றிருக்கிறது, அது அவனுடைய சொந்த இயற்கையின் மற்றும் உலக இயற்கையின் மூலத்தில் அமைந்திருக்கிறது. மேலும் இயற்கை, மனிதனிலும் மற்றும் உலகிலும் தன்னுடைய உச்சத்தில் நன்னெறிக்கு மேலானதாகவும் மற்றும் அதைப் போலவே பகுத்தறிவுக்கு மேலானதாகவும் (supra-ethical, supra-rational) இருப்பதைப் போலவே அதன் தொடக்கத்தில் நன்னெறியினும் தாழ்ந்ததாக (infra- ethical) அதைப்போலவே பகுத்தறிவினும் தாழ்ந்ததாக இருக்குமானால், இன்னமும் அந்த நன்னெறியினும் தாழ்ந்ததில் ஏதோ ஒன்று, மனித மட்டத்தில் நன்னெறியாக ஆகிறது, மேலும் அந்த நன்னெறிக்கு மேலானது தானே நன்னெறியின் நிறைவேற்றமாகும், மேலும் நன்னெறியின் நீண்ட சாலையில் பயணிக்காத யாரும் அதை அடைந்திட முடியாது. எல்லாவற்றிலும் உள்ள நன்மையின் இரகசியம் கீழே ஒளிந்திருக்கிறது, மனிதன் அதையணுகி, நன்னெறி இயலறிவின் மூலமும், நன்னெறிக்கருத்தின் மூலமும் அரைகுறையாக வெளிக்கொணர முயல்கிறான்; நித்தியமான நன்மை மேலே ஒளிந்திருக்கிறது, அது நம்முடைய அரைகுறையான, துண்டு துண்டான நன்னெறிக் கருத்துக்களை விஞ்சி நிற்கிறது.

நம்முடைய நன்னெறி உள்ளந்துதல்கள் மற்றும் செயல்கள் பிற அனைத்தையும் போலவே பகுத்தறிவினும் தாழ்ந்ததிலே தொடங்குகின்றன மற்றும் அடிமனத்திலிருந்து அவை எழுகின்றன. நியாயத்தின் ஓர் இயலறிவாக ஒரு வெளிப்படாத சட்டத்திற்குக் கீழ்ப்படியும் ஓர் இயலறிவாக, கடும்முயற்சிக்குத் தன்னையே கொடுக்கும் ஓர் இயலறிவாக, தியாகத்தின் அல்லது தன்னையே தியாகம் செய்துகொள்ளும் ஓர் இயலறிவாக, அன்பின், கீழ்ப்படிதலின், மற்றவர்களுடன் உள்ள ஒருமைப்பாட்டின் இயலறிவாக அவை தோன்றுகின்றன. மனிதன் முதற்கண் ஏன் மற்றும் எதற்காக என்பதைப் பற்றி எந்த ஒரு கேள்வியும் கேட்காமல் சட்டத்திற்குக் கீழ்ப்படிகிறான்; அவன் பகுத்தறிவிடமிருந்து அதற்கு ஓர் ஒப்புதலை நாடுவதில்லை. அது தன்னைக் காட்டிலும் தன்னினத்தைக் காட்டிலும் உயர்ந்த சக்திகளால் படைக்கப்பட்ட சட்டம் என்பது அவனுடைய முதல் எண்ணமாக இருக்கிறது, மேலும் அவன் பண்டைய கவிஞனுடன் சேர்ந்துகொண்டு எங்கிருந்து இச்சட்டங்கள் தோன்றின என்பது தனக்குத் தெரியாது ஆனால் அவை இருக்கின்றன மற்றும் நிலைத்து இருக்கின்றன மேலும் தண்டனைக்கு ஆளாகாமல் அவற்றை மீறிவிட முடியாது என்பது மட்டுமே தனக்குத் தெரியும் என்கிறான். இயலறிவுகளும் உள்ளுந்துதல்களும் எதை நாடிப் பின் செல்கின்றனவோ அதை நமக்குப் புரியவைக்க பகுத்தறிவு கடும் முயற்சி செய்கிறது. அதனால் இச்சாசக்தி, நன்னெறி உள்ளுந்துதல்களை அறிவுடன் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பிக்கவும் மற்றும் இயலறிவுகளை நன்னெறிக் கருத்துக்களாக மாற்றவும் முடியும். அது மனிதனுடைய நன்னெறி இயலறிவுகளின் செப்பமுறாத மற்றும் பெரும்பாலும் அசட்டையான தவறுகளைத் திருத்துகிறது. அவனுடைய குழப்பமான தொடர்புகளைத் தனியே பிரிக்கிறது மற்றும் தூய்மைப்படுத்துகிறது, தன்னால் முடிந்த அளவு அவனுடைய பெரும்பாலும் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளும் ஒழுக்கவியல் இலட்சியங்களின் தொடர்புகளைச் சுட்டிக்காட்டுகிறது. அவற்றின் முன்னுக்குப்பின் முரணான உரிமைக்கோரிக்கைகளுக்கு இடையே நீதிபதியாக இருந்து தீர்ப்புக்கூற மற்றும் சமரச இணக்கம் ஏற்படுத்த முயற்சி செய்கிறது. நன்னெறி நடவடிக்கைகளுக்கு ஓர் அமைப்புமுறையையும் பல்வேறு பண்புகொண்ட விதிமுறைகளையும் ஏற்பாடு செய்கிறது. இஃதனைத்தும் நன்று; நம்முடைய முன்னேற்றத்தின் ஓர் அவசியமான படிநிலையே; ஆனால் இறுதியில் அது தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் பயிற்சியளிக்க முயன்ற இந்நன்னெறிக் கருத்துக்கள் மற்றும் இந்த அறிவாற்றல் வாய்ந்த இச்சாசக்தி, அதனுடைய பிடியிலிருந்து தப்பித்துக்கொள்கின்றன, மேலும் அதனுடைய எல்லைகளுக்கு அப்பால் மேலே எழுகின்றன. எப்போதும், அதனுடைய ஆட்சியையும் கட்டுப்பாடுகளையும் பொறுத்துக்கொள்ளும் பொழுதும் கூட, அவற்றுக்கு இந்த உடன்பிறந்த போக்கு உண்டு.

ஏனென்றால் நன்னெறி இருப்பு மற்றவற்றைப் போலவே ஒரு வளர்ச்சி மற்றும் அந்த முழுமையை அந்த தெய்வீகத்தை நோக்கிய ஒரு தேடலாகும். அதைப் பகுத்தறிவு கடந்ததில் மட்டுமே உறுதியாக அடைய முடியும். அது ஒரு முழுமையான தூய்மையை, ஒரு முழுமையான நேர்மையை, ஒரு முழுமையான வலிமையை, ஒரு முழுமையான அன்பை மற்றும் தன்னையே அளித்தலை (self-giving) நாடிச் செல்கிறது, அல்லது சமரச சமாதானம் இன்றி, தெய்வீகமாக, அனந்தமாக, ஒருவிதக் கடவுள் தன்மையுடன் மற்றும் நன்னெறி இருப்பின் உருமாற்றத்துடன் (transfiguration) அவற்றை அடைய முடியும் பொழுதுதான் மிகவும் திருப்தியடைகிறது. பகுத்தறிவு முக்கியமாக, தான் எதைச் சிறப்பாகப் புரிந்துகொள்கிறதோ அந்தப் புறத்தோற்றமான நடைமுறை, அந்த இயக்கம், அந்த வெளிப்புறச்செயல், அதன் பலன் மற்றும் விளைவு, அதன் சூழ்நிலை, சந்தர்ப்பம் மற்றும் நோக்கம் இவைகுறித்தே அக்கறை செலுத்துகிறது; இவற்றைக் கொண்டே அது செயலின் ஒழுக்கத்தை மற்றும் செய்பவரின் ஒழுக்கத்தை மதிப்பிடுகிறது. ஆனால் வளர்ச்சியடைந்த நன்னெறி ஜீவன். தான் தேடுவது உள்ளார்ந்த ஏதோ ஒன்று, மேலும் வெளிப்புறச் செயல் அதனுடைய உளவியல் விளைவுகளால், அந்த உள்ளார்ந்த முழுமையை மற்றும் நித்திய ஜீவனை வெளியே கொண்டுவருவதற்கும் மற்றும் நமக்குள்ளேயே வெளிப்படுத்துவதற்குமான ஒரு வழிவகை மட்டுமே என்பதை இயலறிவாக அறியும். நம்முடைய செயல்களின் மதிப்பு, அவற்றின் புறத்தோற்ற இயல்பிலும் வெளிப்புற விளைவிலும் அவ்வளவாக இல்லை. நம்முள் இறைவனின் வளர்ச்சிக்கு உதவுவதில் தான் உள்ளது.

*(தொடரும் .....)*

# மாத்ரிமந்திர் செய்திகள் (Matrimandir News)

## மாத்ரிமந்திரின் மடல் (Matrimandir Diary)

"மாத்ரிமந்திரில் என்ன நடக்கிறது?" இன்றைய நாட்களில் இந்தக் கேள்வியைத்தான் பலரும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வடக்கு பகுதியில் பெரிய அளவில் மண் மேடுகள் காணப்படுகிறது, மண் நிரப்பப்பட்ட லாரிகள் மாத்ரிமந்திர் வளாகத்தை விட்டு வெளியேறும் போது சாலை முழுவதும் தூசு பரந்து, எல்லாவற்றிலும் மெல்லிய அடுக்காக படிந்திருக்கின்றன.

அவநம்பிக்கையும் இறுதிதீர்ப்பு அளிக்கும் குணமும் கொண்டவர்கள் இது உடனடியாக நிகழக்கூடிய பேரழிவு என்று எதிர்பார்க்கிறார்கள். இனி ஆரோவில் நகரத்தைப் பற்றி கனவு கண்டு கொண்டிருக்காமல், ஆனால், மகத்தான சாகச உணர்வைக் கொண்டவர்கள், இத்தருணத்தின் தனிச்சிறப்புமிக்க வாய்ப்பைப் புரிந்துகொள்வதில் உறுதியாக இருப்பவர்கள், ஏரியின் இரண்டாவது பிரிவின் கட்டுமானத்தின் மிக விரைவான முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள்.

டவுன் ஹாலில் இருந்து மாத்ரிமந்திரை பார்ப்பதை தடுப்பது போல மாத்ரிமந்திரின் வடக்கே பெரிய அளவில் மண் மேடுகள் காணப்படுவது ஏன்? முதல் காரணம், ஏரியின் 2வது பிரிவில் இருந்து தோண்டும் மண்ணை எங்காவது கொட்ட வேண்டும் என்பது அவசியம் ஆகும், ஏற்கனவே ஏரி 10 மீட்டர் முழு கொள்ளளவு ஆழத்துடன் 150 மீட்டர் அளவுக்கு அதிகமாக தோண்டப்பட்டுள்ளது. ஆனால் அந்த மண்ணை ஏன் ஏரி வரக்கூடிய அதே பகுதியில் கொட்ட வேண்டும்? நிச்சயமாக இவை அனைத்தும் மீண்டும் அகற்றப்பட வேண்டும், இது நேரம், ஆற்றல், பணத்தின் அடிப்படையில் ஒரு பெரிய விரயம் அல்லவா?

ஸ்ரீ அன்னையின் விருப்பப்படி, ஏரியில் இருந்து தோண்டப்பட்ட மண்ணைக் கொண்டு, நகரின் வடகிழக்கில் எங்காவது ஒரு பெரிய குன்றை உருவாக்குவது நோக்கமாகும். இக்குன்றுக்கான நிலையான இடம் இன்னும் கண்டறியப்படாததால், சோதனை ஏரி மற்றும் ஏரியின் 2வது பிரிவு ஆகிய இரண்டிலிருந்தும் இதுவரை தோண்டப்பட்ட அனைத்து மண்ணும் ஏரி வரவேண்டிய பகுதியிலேயே வைக்கப்படவேண்டும். இருப்பினும், தேவையில்லாமல் வளங்களை வீணாக்கி வருகிறது என்று இதற்கு அர்த்தமில்லை. தோண்டிய மண்ணில் இருந்து வலுவான, நிலையான ஒரு குன்றை உருவாக்க, ஏரியின் அடிப்பகுதியில் காணப்படும் வலுவான கல்மண் சேர்ந்த கலவை, (சரளை) களிமண் ஆகியவற்றை குன்றின் அடித்தளமாக போட வேண்டும் மேலே லேசான சிவப்பு மண் தேவைப்படும். அதனால் மண்ணை இரண்டு முறை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவது தவிர்க்க முடியாதது. இன்னும் இக்குன்றுக்கான இடத்தை கண்டறிதல், மண்ணைக் கொண்டு வருவதற்கு கன்வேயர் பெல்ட் அமைத்தல் ஆகியவை ஏரிக் குழுவின் முன்னுரிமை பட்டியலில் முதன்மையாக உள்ளது.

இதற்கிடையில், கோடை மற்றும் குளிர்கால பருவமழைகளில் இருந்து மழைநீரைச் சேகரிப்பதற்காக, சோதனை ஏரியின் பணிகள் தொடர்கின்றன, அங்கு கான்கிரீட் லெகோ பிளாக்கினால் ஆன அணை சுவர்கள் தடிமனாகவும், அவற்றின் முழு உயரமான 10.6 மீட்டருக்கும் உயர்த்தப்படுகின்றன, 2024ஆம் ஆண்டின் இறுதிக்குள் சோதனை ஏரி அதன் முழு கொள்ளளவு ஆழத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏரியின் பிரிவு 2-இல், சோதனை ஏரியிலிருந்து சுமார் 170 மீட்டர் தொலைவிற்கு மற்றொரு லெகோ பிளாக் சுவருக்கு அடித்தளம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், தற்போது நடப்பது போல் பணி சீராக நடந்தால், இவ்வாண்டு பருவமழைக்கு முன், அடுத்த சுவரை, சுமார் 300 மீட்டர் உயரத்தில் அமைக்க வேண்டிய அவசியமில்லை. 21.02.2028க்குள் ஏரியை முடிக்க வேண்டும் என்ற இலக்கை அடைவதற்கு இது உகந்ததாக இருக்கும், ஸ்ரீ அன்னையின் 150வது பிறந்தநாளுக்கான பரிசாகும்.

சேகரிக்கப்படும் மழைநீர் மற்றும் உப்புநீக்கம் செய்யப்பட்ட நீரைக் கொண்டு ஏரியை நிரப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. இந்த ஏரியில் ஆழமான ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளது, இது நிலத்தடி நீர்நிலையை முழுவதும் சார்ந்திருக்கும் உயிரியப்பகுதிகளின் நீர்நிலைகளை உறிஞ்சிவிடும் என்ற வதந்திகள் தவறானவை. மாறாக, இந்த ஏரி நகரம் மற்றும் அண்டை கிராமங்களுக்கு நீர்ப் பற்றாக்குறை காலங்களில் மதிப்புமிக்க வளமாக இருக்கும்.

4 ஆண்டு திட்டத்தின்படி, 21.02.2028-க்குள் மாத்ரிமந்திரை முழுவதுமாக கட்டி முடிக்கவேண்டும் என்ற இலக்குடன், நாங்கள் ஏரிப் பணியை திட்டமிட்டுள்ளோம், தோட்டப் பணிகளில் சிறிது பின்தங்கியுள்ளோம், ஆனால் அதிகளவில் இல்லை, புதிய ஏர்கண்டிஷன் அமைக்கும் பணி கிட்டத்தட்ட முடிந்தது, மாத்ரிமந்திரின் நான்கு நுழைவாயில்களின் ஸ்லைடிங் கோல்டன் கதவு அமைக்கும் பணி மெதுவாக நடந்தாலும், ஹீலியோஸ்டாட்டிற்கான புதிய வடிவமைப்பு ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது, ஓவல் சாலையில் பாதியளவு சாலை அமைக்கும் பணி ஏப்ரல் இறுதிக்குள் முடிக்கப்படும். ஒளித் தோட்டம் (The Garden of Light) முடிவடையும் தருவாயில் உள்ளது, செல்வம் தோட்டப்பணி (the Garden of Wealth) தொடங்கியுள்ளது. மாத்ரிமந்திரில் உள்ள பணியாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், நிர்வாகிகள் ஆகியோரிடையே நல்ல ஆற்றலும், உற்சாகமும் நிறைந்த சூழல் நிலவுகிறது, மேலும் இங்கு இப்போது ஸ்ரீ அன்னைக்கு சேவை செய்வது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

அன்புடன், *மாத்ரிமந்திர் குழு*

---

## மாத்ரிமந்திர் ஏரியின் தோண்டுதல் பணியை நிறுத்தக் கோரிய மனு தொடர்பாக (Regarding a petition to halt the excavation of the Matrimandir Lake)

ஆரோவில்வாசிகள், புதிதாய்ச்சேர்ந்தவர்கள் ஆகியோர் அனைவருக்கும்,

***உங்களுக்கு புலப்படாதவற்றின் மூலம் இந்நகரம் கட்டப்படும். இருப்பினும், கருவிகளாகச் செயல்பட வேண்டிய மனிதர்கள் தாங்களாகவே அதைச் செய்வார்கள். அவர்கள் பெரும் சக்திகளின் கைகளில் பொம்மைகள் மட்டுமே. எதுவும் மனிதர்களைச் சார்ந்து இல்லை-திட்டமிடுதல் அல்லது செயல்படுத்துதல்-எதுவும் இல்லை! அதனால்தான் சிரிக்க முடிகிறது.***

*தி மதர் ஆன் ஆரோவில், 1969 செப்டம்பர்*

ஏப்ரல் 17 அன்று ஆரோவில்வாசிகள், புதிதாய்ச்சேர்ந்தவர்கள் ஆகியோர் அனைவருக்கும், பின்வரும் மின்னஞ்சல் முகவரியிலிருந்து பின்வரும் மின்னஞ்சலைப் பெற்றோம் என்பதை மாத்ரிமந்திரின் நிர்வாகக் குழு தெரிவித்துக் கொள்கிறது: the.city.the.earth.needs@gmail.com:

*"அன்பார்ந்த மாத்ரிமந்திர் நிர்வாகிகளுக்கு, சமீபத்தில், ஏரி தோண்டுதல் பணியை நிறுத்தக் கோரி, சமூகத்தில் ஒரு மனு சுற்றுக்கு விடப்பட்டது.*
*எதிர்காலத்தில் ஏரி எப்படி இருக்கவேண்டும் என்பதை அறிய, இப்பணியை இடைநிறுத்தவும், மீண்டும் சமூகத்தவரிடம் கருத்துக் கேட்கவும் கோரி 400க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டுள்ளனர்.*
*சமூகத்தைச் சேர்ந்த சிலர், வியாழக்கிழமை காலை 11 மணிக்கு உங்களைச் சந்தித்து மனு கொடுக்க விரும்புகின்றனர்.*
*எங்களை வரவேற்பதற்கு தாங்கள் தயாராக இருக்கவும். இச்சந்திப்பு குறுகியதாகவும், அன்பாகவும், நம்பிக்கையுடனும் இருக்கும்.*
*அக்கறைகொண்ட குடியிருப்பாளர்கள்"*

☼ ☼ ☼ ☼ ☼ ☼

வியாழன் காலை 11 மணியளவில் 5 பேர் கொண்ட ஆரோவில்வாசிகள் குழு மாத்ரிமந்திர் அலுவலகத்திற்கு வந்து ஸ்ரீஅன்னையின் புகைப்படத்தின் முன் நிர்வாகிகள் கேட்டுக்கொண்டபடி மனுவை வைத்தனர். அப்போது எந்த பதிலும் அளிக்காத நிர்வாகிகளிடம் இருந்து பிரதிநிதிகள் பணிவாகவும், அன்பாகவும் விரைவாகவும் பதிலளிக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

வியாழன் பிற்பகலில், நிர்வாகிகளில் ஒருவருக்கு பிரதிநிதிகளில் ஒருவரான ஆரோசன் இடமிருந்து வாட்ஸ்அப் செய்தி வந்தது, நிர்வாகிகள் மனுவுக்கு இணங்க வேண்டாம் என்று முடிவு செய்தால் நீதிமன்ற வழக்கு போடப்படும் அல்லது பணிநீக்கம் செய்யப்படும் என்று நிர்வாகக் குழுவை அச்சுறுத்தியது.

மனுவின் உரையைப் படித்த நிர்வாகிகள், ஏரியின் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பால் சுற்றுச்சூழலுக்கும், சுற்றியுள்ள கிராமங்களின் நீர்வளத்துக்கும் ஏற்படும் தாக்கம் குறித்து அடிப்படை பிழைகள் இருப்பதைக் கண்டறிந்தனர்.

குறிப்பாக இதுபோன்ற மிரட்டுதல் மற்றும் அச்சுறுத்தும் சூழ்நிலையில், தற்போது நடைபெற்று வரும் வேலையின் அற்புதமான வேகத்தை இதுபோன்ற குறைபாடுள்ள அடிப்படையில் உடைப்பது முற்றிலும் தவறு என்று நிர்வாகிகள் தெரிவிக்க விரும்புகிறார்கள்.

ஏரி பகுதி 2 அதன் முழு நீளம், அகலம் மற்றும் ஆழத்தை எட்டியுள்ளது, எனவே, இந்த பகுதியின் வேலையை முடிக்காமல் வேலையை நிறுத்துவதற்கு எந்த காரணமும் இல்லை.

மாத்ரிமந்திரின் நிர்வாகிகள் ஸ்ரீ அன்னையால் நியமிக்கப்பட்ட ஆரோவில்லின் தலைமைக் கட்டிடக்கலைஞர் ரேஷே ஆன்ஷே அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஏரி வடிவமைப்புடன் பணிபுரிகின்றனர். இந்த வடிவமைப்பு முந்தைய நிர்வாகக் குழுவால் பரிசோதனை ஏரிக்காகவும் பின்பற்றப்பட்டது. ஏரியின் வடிவமைப்பை தேர்வு செய்வதோ அல்லது மாற்றுவதோ நிர்வாகிகளின் பணி அல்ல.

ஏரிக்கான நன்கொடையாளர்கள் இது ஏரியின் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் அது பின்பற்றப்படும் என்ற அடிப்படையில் தங்கள் நன்கொடைகளை வழங்குகிறார்கள் என்பதையும் மனதில்கொள்ள வேண்டியது அவசியம்.

இப்போது ஏரியின் பணிகள் நிறுத்தப்பட்டால், ஏரியின் கட்டுமானமும், மாத்ரிமந்திரும் கூட, ஆரோவில்வாசிகளின் கைகளில் இருந்து நிச்சயமாகப் பறிக்கப்படும் என்பதை ஆரோவில்வாசிகள், புதிதாய்ச்சேர்ந்தவர்கள் ஆகிய அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று மாத்ரிமந்திரின் நிர்வாகிகள் உண்மையாக நம்புகிறார்கள்.

மனுவில் கையெழுத்திட்ட அனைவருக்கும் உரிய மரியாதையுடன், இந்தக் காரணங்களால்தான் ஏரிப் பணியை இப்போதைக்கு நிறுத்த முடியாது என்பதை நிர்வாகிகள் தெரிவிக்க விரும்புகின்றனர்.

ஏரியின் கட்டுமானம் மற்றும் நகரத்தின் மற்ற பகுதிகள் தூசி நிறைந்த, சத்தத்துடன் கூடிய வேலையாக இருக்கும் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், ஆனால் நாம் அதைக் கட்டிமுடிப்பதற்காகவே நாம் இங்கே இருக்கிறோம். ஆரம்ப காலத்தில் மாத்ரிமந்திரின் அஸ்திவாரத்திற்காக பெரிய மண்குன்றுகளை நகர்த்தும்போது நமது தோள்களில் செம்மண் படிவதைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைந்தோம். இப்போது நாம் அனைவரும் அங்கு அமர்ந்திருக்கும் அழகான தாமரைக் குளத்தை விரும்புகிறோம். நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் சாத்தியமான அனைத்து குறைபாடுகளையும் பற்றி கவலைப்படுவதை நிறுத்துவோம்; பொய்யான வதந்திகளைக் கேட்டு நம் மனதையும் இதயத்தையும் நச்சுப் படுத்துவதை நிறுத்திவிட்டு, நீண்ட ஆண்டுகளுக்கு முன்பு நாம் உருவாக்கிய அந்த மாபெரும் சாகச உணர்வின் தீப்பொறியை மீண்டும் பெறுவோம்.

உண்மையின் சேவையில், *அந்துவான், திவ்யா, ஜான், ஜூடித், சுந்தர், மாத்ரிமந்திர் நிர்வாகிகள்*

---

**<u>மாத்ரிமந்திர் ஏரியின் தோண்டுதல் பணியை நிறுத்தக் கோரிய மனு தொடர்பாக - செயற்குழு சமர்பித்தது</u>**

<u>(Regarding the Petition to halt the excavation of the Matrimandir Lake - submitted by the Working Committee)</u>

மாத்ரிமந்திர் நிர்வாகிகளின் மாஸ்புல்லட்டின் அறிக்கையையும், தவறான குற்றச்சாட்டுகள், அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டுதல் ஆகியவற்றை எதிர்கொண்டு அப்பணியைத் தொடர அவர்கள் கொண்டுள்ள உறுதியையும் அர்ப்பணிப்பையும் செயற்குழு பாராட்டுகிறது.

மனுக்கள், அச்சுறுத்தல்கள், புறக்கணிப்புகள், முற்றுகைகள் என ஆரோவில்லை விஷமாக்கி கடந்த இரண்டரை ஆண்டுகளாக பணயக்கைதிகளாக வைத்திருக்கும் சூழலுக்கு மாத்ரிமந்திரில் இடமில்லை. இது ஸ்ரீ அன்னைக்கான பணியின் இடம்: உள்அறை, தோட்டம், ஏரி, அதை உணர்ந்து கொள்வது நமது மகத்தான கூட்டுப் பாக்கியம்.

தோண்டுதல் பணியை மேற்கொள்ள அன்னை அவர்கள் உள்ளூர் கிராமவாசிகளை அழைத்தார். மேலும் மாத்ரிமந்திர் கட்டுமானப் பணியைச் செய்ய கட்டுமான நிறுவனமான ஈசிசி-க்கு அனுமதி அளித்திருந்தார், (இருந்தாலும் அவர் மறைந்த பிறகு அது செயல்படவில்லை). இவ்வேலைகளுக்கு கூலித் தொழிலாளர்கள் அல்லது வெளித் தொழிலாளர்கள் இல்லாமல் மாத்ரிமந்திர் பணி செய்யப்படுவதை அவர் விரும்பினார். அதனால் எல்லா சூழ்நிலைகளிலும் பணிகள் தொடரும் என்பது உறுதி: அதாவது சிரமங்கள், அச்சுறுத்தல்கள், தடைகள் அல்லது நியாயமற்ற கோரிக்கைகள் ஆகியவற்றுக்காக வேலையை நிறுத்துதல்.

இந்த சவாலை நேர்மையுடன் ஏற்றுக்கொண்டதற்காக மாத்ரிமந்திர் நிர்வாகக் குழுவிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், மேலும் இந்த கடினமான ஆனால் அற்புதமான பணியைச் செய்யத் தேவையான பல ஊழியர்களையும் நிபுணர்களையும் ஒருங்கிணைத்து பணி தொடர்வதை உறுதிசெய்கிறோம்.

உலகம் மீண்டும் ஒரு சாத்தியமான மோதலைச் சந்திக்கும்போது, மாத்ரிமந்திர் மற்றும் அதன் ஏரி அமைதிக்கான பகுதியைக் குறிக்கிறது என்பதை நினைவில் கொள்வோம். அந்த அமைதியை நமக்குள்ளும், ஆரோவில்லுக்காகவும், உலகத்துக்காகவும் எடுத்துச் செல்வதும், இந்தப் பெரிய சாகசத்தின் தூசி நிறைந்த சாலைகளில் நமக்குக் கொடுக்கப்பட்ட வேலையை நிறைவேற்றுவதும் நமது பொறுப்பாகும்.

உண்மையுள்ள, *செயற்குழு, அனு, அருண், ஜோசபா, பார்த்தா, செல்வராஜ், டினா*

---

**2024 ஏப்ரல் மாதாந்திர வெளிப்படைத்தன்மை அறிக்கை** (Monthly Transparency Report April 2024)

வெளிப்படைத்தன்மைக்கான எங்கள் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, ஏப்ரல் மாதத்திற்கான எங்களது ஏப்ரல் மாத அறிக்கையை பகிர்ந்துகொள்வதில் நாங்கள் மகிழ்ச்சி கொள்கிறோம்.

**கண்ணோட்டம்**
புதிய சேர்க்கைகள்: 15 (2023, ஏப்ரல் முதல் 215 நாய்கள் உள்ளன)
ரேபிஸ் நோய் என சந்தேகத்திற்கிடமான நாய்கள் : 0
தத்தெடுப்புகள் மற்றும் வெளியில் அனுப்பப்பட்டவை: 7
அளிக்கப்பட்ட தடுப்பூசிகள்: 9
ஏபிசி காப்பகத்தில் கருத்தடை செய்யப்பட்ட நாய்கள்: 17 (பிப்ரவரியிலிருந்து மொத்தம் 66 நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டுள்ளது.
குடற்புழு நீக்கம்: 56

**நன்கொடைகள்**
இந்த மாதம் ஒரு பேரிழப்பாக அமைந்தது, ஏனெனில் நாங்கள் பிசிசியிலிருந்து பெறும் ரூ.50,000 நிதி உட்பட ரூ. 82.800 பணப் பங்களிப்பை மட்டுமே பெற்றோம், இது தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாக, எங்களின் மாதாந்திர நடைமுறை செலவான ரூ. 3 இலட்சத்தை ஈடுசெய்யவில்லை. எங்களுக்கு உடனடியாக உங்களது ஆதரவு தேவை! தயவுசெய்து நன்கொடை அளிக்கவும்!

**செலவுகள்**
நாய்களுக்கான உணவு: இந்த மாதம் நாங்கள் எங்கள் நாய்களுக்கு 1.8 டன் அரிசி, 2 டன் கோழி மற்றும் 600 முட்டைகளை உணவாக கொடுத்துள்ளோம், மேலும் துணை உணவாக நன்கொடை அளிக்கப்பட்ட காய்கறிகள், பருப்பு போன்ற உணவுப் பொருட்களுடன் கூடுதலாக எங்களுக்கு தோராயமாக ரூ. 1.35 இலட்சம் செலவாகும்.

பணியாளர்கள் செலவுகள்: எங்களது ஊழியர்கள், ஊதியம் பெறும் கால்நடை பராமரிப்புப் பணியாளர்கள், 2 கால்நடை மருத்துவர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான இந்த மாதத்திற்கான மொத்த ஊழியர்களின் செலவு ரூ. 1 இலட்சம் ஆகும்.

மருத்துவச் செலவு: உடனடியாகத் தேவைப்படும் மருந்துகள், சிரப்கள், இரத்தப் பரிசோதனைகள், மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரும் நாய்கள் மற்றும் கருத்தடை செய்வதற்கு தேவையான பொருட்கள் ஆகியவற்றுக்கு இந்த மாதம் ரூ.40,000 நாங்கள் செலவிட்டுள்ளோம்.

**சமையலறை கூரை இடிந்து விழுந்தது**
பழைய காப்பகத்தின் உள்கட்டமைப்பு ஆபத்தான அளவில் மோசமடைந்து வருகிறது. இந்த மாதம் சமையலறையின் கூரை இடிந்து விழுந்தது, ஏனெனில் கூரையைத் தாங்கி நின்ற பழைய தூண்கள் உடைந்து, எங்களது ஊழியர்களின் உயிருக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. பாதியளவிற்கு கட்டப்பட்டுள்ள ஓய்விடத்தை தற்காலிக சமையலறையாக மாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. பல ஆண்டுகளாக, காப்பகத்தின் உள்கட்டமைப்பு சரியாக பராமரிக்கப்படாததாலும், கட்டுமானத்திற்கு தரமற்ற பொருட்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாலும், விலங்குகளுக்கு இது பாதுகாப்பற்ற இடமாக மாறி வருவதால் இதற்கு உடனடி தீர்வு காணவேண்டும். ஆரோவில்வாசிகள், நாய் பிரியர்கள் தங்களுடைய நேரம், ஆற்றல், நன்கொடைப் பொருட்களை அளித்து காப்பகத்தைச் சீர்செய்ய எங்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**இலவச கருத்தடை செயல்முறை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது**
துரதிர்ஷ்டவசமாக, நிதியுதவியைப் பெறுவதற்கு எங்களால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், எங்கள் காப்பகத்திலிருந்து தத்தெடுக்கப்பட்ட நாய்களுக்கும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நாய் உரிமையாளர்களின் நாய்களுக்கும் இலவசமாக கருத்தடை சிகிச்சையை தொடர்ந்து வழங்க முடியவில்லை. கூடுதல் நிதி கிடைக்கும் வரை இந்த சேவையை நாங்கள் நிறுத்தி வைக்க வேண்டும். இருப்பினும், ஒவ்வொரு திங்களன்றும் கருத்தடை சிகிச்சைகளை தொடர்ந்து வழங்கி வருகிறோம், அதற்கான எங்களது கட்டணம் ரூ. 3,000 (ஆரோவில்வாசிகளுக்கு ரூ. 2,500) ஆகும். ஏதேனும் சிரமம் ஏற்பட்டிருந்தால், அதற்கு நாங்கள் மன்னிப்பு கோருகிறோம், மேலும் ஆரோவில் சமூகம், ஆரோவில் மண்டலப் பகுதிகளில் உள்ள அனைத்து நாய்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

**கால்நடை பராமரிப்புத் துறையின் ஆய்வு**
எங்களது புதிய அக்கம்பக்கத்தவரான ரெட் எர்த் ரைடிங் ஸ்கூல், நாய்கள் காப்பகம் பற்றிய தவறான தகவல்களை கூறி, காப்பகம் அதற்கு அடுத்ததாக ஒதுக்கப்பட்ட ஆரோவில் இடத்தில் மாற்றப்படுவதற்கு ஆட்சேபணை தெரிவித்தது. புதிய ஆரோவில் நாய்கள் காப்பகத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தைப் பார்வையிடுவதற்காக 17.04.2024 அன்று கால்நடை பராமரிப்பு அமைச்சகத்தின் பிரதிநிதிகளை நாங்கள் அழைத்திருந்தோம். மரியாதைக்குரிய கட்டிடக் கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட கட்டடக்கலைத் திட்டங்கள் அக்குழுவிடம் வழங்கப்பட்டன, அவை முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு அனைத்து பாதுகாப்புத் தரங்களையும், குறிப்பாக அருகிலுள்ள ரெட் எர்த் ரைடிங் ஸ்கூல் தொடர்பாகவும், குதிரைகள் மற்றும் நாய்களின் நல்வாழ்வை அது உறுதிபடுத்தியது. இடத்தை நேரில் ஆய்வு செய்ததைத் தொடர்ந்து, பிரதிநிதிகள் குழு தற்போதுள்ள ஆரோவில் நாய்கள் காப்பகத்தை பார்வையிட்டது, அங்கு ரெட் எர்த் ரைடிங் பள்ளியின் புகார்களுக்கு மாறாக, தற்போது காப்பகத்தில் வசிக்கும் நாய்களின் உண்மையான எண்ணிக்கை 250 (மேலும் 33 நாய்க்குட்டிகள்) என்பது உறுதி செய்யப்பட்டது. 1,000 என தவறாகக் கூறப்பட்டுள்ளது. கூடுதலாக, அனைத்து நாய்களுக்கும் மைக்ரோசிப், தடுப்பூசி, குடற்புழு நீக்கம், கருத்தடை செய்யப்பட்டுள்ளன, மோசமான பழைய காப்பகத்தின் வசதியில் சவாலான சூழ்நிலையிலும் நல்ல ஆரோக்கியத்துடனும் நல்ல நிலையிலும் பராமரிக்கப்படுகிறது என உறுதிபடுத்தப்பட்டது. கால்நடை பராமரிப்புத் துறை புதிய இடத்திற்கு ஒப்புதல் அளித்தது, புதிய ஆரோவில் நாய்கள் காப்பகத்தின் கட்டுமானத்தை உடனடியாக தொடங்க பரிந்துரைத்தது.

ஆரோவில் நாய்கள் காப்பகத்திற்கு தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் அனைவருக்கும் நன்றி! நமது நாய் பிரியர்கள் மற்றும் விலங்குகளை நேசிக்கும் அனைவரும் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி முன்னோக்கி செல்வோம்.

*ஆரோவில் நாய்கள் காப்பக குழு, டினா, ஜோசபா, ஆர்தர், மர்*

---

## அறிவிப்புகள் (Announcements)

**கோடைக்காலத்தில் ஃப்ரீஸ்டோர் திறந்திருக்கும் நேரம்** (Freestore summer opening hours:)

மே, ஜூன் ஆகிய மாதங்களில் ஃப்ரீஸ்டோர் காலை 8:30 - பிற்பகல் 1:00 மணி வரை திறந்திருக்கும்.
தயவுசெய்து நினைவில் கொள்ளவும் - பிற்பகலில் மூடப்படும். அன்புடன் - *ஃப்ரீஸ்டோர் குழு*

**"மாற்றம்" குழுவின் அறிவிப்பு** (Announcement From Maatram)

2024 மே மாதம் *"மாற்றம்"* மூடப்படுவதால், ஓசிஎச் (OCH) அமர்வுகள் (பொது ஆலோசனை நேரம்) கிடையாது என்பதை அறியவும்.

---

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**நினைவூட்டல்: ஏப்ரல் 26 வெள்ளிக்கிழமை - "தி நைட் ஆஃப் தி இகுவானா" ("THE NIGHT OF THE IGUANA" ).**
இயக்கம் - **ஜான் ஹுஸ்டன்**, யுஎஸ், 1964.

**மே 3 வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு - "குட்வில் ஹன்டிங்" ("GOOD WILL HUNTING"),** யுஎஸ், 1997.
**இயக்கம் - கஸ் வான் சாண்ட்**. *நடிப்பு* - ராபின் வில்லியம்ஸ், மேட் டாமன், பென் அஃப்லெக், ஸ்டெல்லன் ஸ்கார்ஸ்கார்ட்.
*ஆங்கில மொழிப்படம், ஆங்கிலத் துணைவாசகங்களுடன் - காலம்: 2 மணிநேரம் 05 நிமிடம்.*

---

Savitri BHAVAN




**கனவு தெய்வீகம் தொடர்** (Dream Divine Series)

குறிப்பாக புதிதாய்ச்சேர்ந்தவர்களுக்கு (நியூகம்மர்) வழிகாட்டுவதற்கு **கனவு தெய்வீகம் தொடர்** ('தி ட்ரீம் டிவைன் சீரிஸ்') என்ற திட்டத்தை சாவித்ரி பவன் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆரோவில்லின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் புதிதாய்ச்சேர்ந்தவர்கள் (நியூகம்மர்) புரிந்துகொள்வதும், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் வாழ்க்கை மற்றும் படைப்புகள், பூரண யோகம் ஆகியன பற்றி அறிந்து கொள்வதும், இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். புதன்கிழமைதோறும் மாலை 4.30-5.30 மணிக்கு வாராந்திர அமர்வு நடைபெறும். இந்தத் தொடரில் விளக்கக்காட்சிகள், திரைப்படங்கள், உரைகள் போன்றவை அடங்கும், அதைத் தொடர்ந்து கேள்விகள், பதில்கள் அமர்வு.

**மே 1 புதன்கிழமை மாலை 4:30 - 5:30 மணிக்கு,**
**திவ்யான்ஷி வழங்கும் விளக்கக்காட்சி**
**"Savitri is a Mantra for the Transformation of the World" - The Mother**
**சாவித்ரி பவனில் உள்ள சங்கம் ஹால்**
அனைவரும் வருக.

---



**மே 04, சனிக்கிழமை மாலை 4.00 - 5.00 மணிக்கு,**
**"The Journey from Mind to Supermind"**
என்ற தலைப்பில் **அருண்குமார் அவர்கள் உரையாற்றுவார்.**
**சாவித்ரி பவனில் உள்ள சங்கம் ஹால்**
அனைவரும் வருக.

*அருண்குமார் அவர்கள் பூரணயோகத்தைப் பின்பற்றுபவர் ஆவார். குருதாஸ்பூரில் உள்ள ஸ்ரீ அரவிந்தர் ஆன்மீக மையத்துடன் தொடர்புள்ளவர். அவர் கடந்த காலங்களில் பலமுறை ஆசிரமத்திற்கும் ஆரோவில்லுக்கும் வருகை தந்துள்ளார்.*

---

**குங் ஃபூ பாண்டா 2** (Kung Fu Panda 2)



**ஏப்ரல் 27 அன்று மாலை 7 மணிக்கு, யூனிட்டி பெவிலியனில் குங் ஃபூ பாண்டா பகுதி 2 திரைப்படக்காட்சி.**

போ மற்றும் கும்பலுடன் மற்றொரு சாகசத்தை மேற்கொள்ள தயாராகுங்கள்! குங் ஃபூ பாண்டா பகுதி 2 திரைப்படத்தைக் கண்டுகளிக்க எங்களுடன் இணையுங்கள்.
சிரிப்பு, அதிரடி மற்றும் பாண்டா-மோனியம் ஆகியவற்றிற்கு தயாராகுங்கள்!
அனுமதி இலவசம்.

---



**ஒரு தற்கால நடன படைப்பு**

**Weight of Time (நேரத்தின் எடை)**

**நடனம் & நடிப்பு**
**பிரசாந்த் மோர் & தீபக் குர்கி**
**ஏப்ரல் 27, இரவு 7 மணி, கிரிபா,**

தொடர்புக்கு - +9175075 88719

---

## குயிலைப் படைப்பாற்றல் மையத்தில் கோடைக்கால முகாம் - 2024 மே
(Summer Camp at our Kuilai Creative Centre – May'24)

தங்கள் ஆதரவு தேவைப்படுகிறது!

எங்கள் குயிலை படைப்பாற்றல் மையத்தில், ஆண்டு முழுவதும் பல்வேறு செயல்பாடுகளில் பங்கேற்கும் எங்கள் மாணவர்களுக்காக ஆண்டுதோறும் மே மாதம் கோடைக்கால முகாம் நடத்துகிறோம். அவர்களின் பெற்றோர்கள் வேலை செய்து கொண்டிருக்கும் போதே, கோடை விடுமுறையின் போது மதிய உணவு மற்றும் ஸ்நாக்ஸ் ஆகியவற்றுடன், பல வகையான மகிழ்ச்சியான செயல்பாடுகளைச் செய்கின்றோம். மேலும் அவர்களை வெளியூர்களுக்கு அழைத்துச் சென்று அவர்கள் மகிழ்ச்சியுடன் கண்டும் கற்றும் மகிழ நாங்கள் விரும்புகிறோம்.




பெரும்பாலான குழந்தைகள் நமது ஆரோவில்லைச் சுற்றியுள்ள பகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 10 முதல் 17 வயதுக்கு உட்பட்டவர்கள்.

- நான்கு நாட்களுக்கு கொடைக்கானல் பயணம் (தென்னிந்தியாவில் உள்ள ஒரு மலைப்பகுதி)
- மாத்ரிமந்திர் மற்றும் ஆரோவில்லில் உள்ள பல இடங்களைச் சென்று பார்த்தல்.
- ஆரோக்கியா கண் பாதுகாப்பு மூலம் கண் பராமரிப்பு அமர்வுகள்.
- பல மகிழ்ச்சியான விளையாட்டுகள் மற்றும் செயல்பாடுகள்
- இலவச மதிய உணவு மற்றும் இலவச ஸ்நாக்ஸ்

தங்களின் எவ்விதமான ஆதரவும் வரவேற்கப்படுகிறது.

https://aviusa.org/?form=Kuilai
https://auroville.org/page/donate-from-india
ஆரோவில்லில் இருந்து: 240051- குயிலை கிரியேட்டிவ் சென்டர் கலைக்ஷன்
தொடர்புக்கு: +91-8608473385
kuilaicreativecentre@auroville.org.in அல்லது kuilaicreativecentre.auroville@gmail.com

---

## டிசிஜி-க்கான திருத்தப்பட்ட/ கூடுதல் வழிகாட்டுதல்கள் - 23.04.24
(REVISED/ ADDITIONAL GUIDELINES FOR DCG - 23.04.24)

1. **நிதி விடுவிப்பு** - நன்கொடைகளுக்கு கணக்குப்பதிவு செய்வதற்கான ஆடிட்டர்களின் மேம்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம். இது பெறப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, சமூகத்திற்குத் தெரிவிக்கப்பட்டதும், நிதி விடுவிப்பு தொடங்கும். இது ஆய்வு மற்றும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டது - யூனிட் (நிறுவனம்) மற்றும் நிர்வாகிகளின் நகரச்சேவைக்கான பங்களிப்புத்தொகைகள், ஆர்ஓஆர்-இன் பகுதியாக இருத்தல், யூனிட் தணிக்கை போன்றவை.

2. **ஒரு யூனிட்டிலிருந்து மற்றொன்றுக்கு பரிமாற்றம் செய்தல்-**
   a) பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான ஆரோவில் நிறுவனங்களுக்கு இடையேயான பணக்கொடுப்பனவு மற்றும் இரசீதுகள் செலவுகளாக/இரசீதுகளாகக் கருதப்பட வேண்டும் மற்றும் அவை ஜிஎஸ்டி விதிகளுக்கு உட்பட்டவை.
   b) ஒரு யூனிட்டிலிருந்து மற்றொன்றுக்கு வேறு பரிமாற்றம் அல்லது கடன் அனுமதிக்கப்படாது.
   c) ஒரு யூனிட்டிலிருந்து மற்றொரு யூனிட்டிற்கு கடன்களை அல்லது பொருட்களை நன்கொடைகளாக வழங்க முடியாது.

3. **அடுத்த ஆண்டுகளுக்கு எடுத்துச்செல்லுதல் மற்றும் கார்பஸ் நிதிகள்** - நன்கொடையாளரிடம் இருந்து எந்த கடிதமும் இல்லாமல் நன்கொடை நிதியின் இருப்பு அடுத்த நிதியாண்டுக்கு கொண்டு செல்லப்படலாம். கார்பஸ் நிதி நன்கொடைகளுக்கு நன்கொடையாளரிடம் இருந்து ஒரு கடிதம் பெற்றிருக்க வேண்டும் - இங்கே ஆண்டுகளின் கால அளவைக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

4. **நிறுவன சமூகப் பொறுப்பு (சிஎஸ்ஆர்) நன்கொடைகள் -**
   a) செலவுகளை உன்னிப்பாகப் பதிவு செய்ய, நன்கொடையாளருடன் கணக்குகளைப் பகிர்ந்து கொள்வது அவசியம். பொருந்தக்கூடிய அனைத்து சிஎஸ்ஆர் விதிகளையும் பின்பற்ற, ஒரு விதியின்படி- நிதியாண்டின் முடிவில் பயன்படுத்தப்படாத தொகையை நன்கொடையாளரிடம் திருப்பித் தரவேண்டும்.
   b) அனைத்து சிஎஸ்ஆர் நிதிகளும் யூனிட்டி ஃபண்ட் மூலமாக மட்டுமே பெறப்படும்.

5. **ஆரோவில் மண்டலப் புவியியல் பகுதிக்கு வெளியே அறப்பணிகளை மேற்கொள்ளுதல்** - இப்பகுதிக்கு வெளியில் அறப்பணிகளைச் செய்வதற்கான செலவுகளை (மற்றும் நன்கொடைகள்) குறைத்தல். இப்பணிகளில் ஈடுபட்டுள்ள யூனிட்டுகள் அல்லது செயல்பாடுகளின் புதிய பதிவு தொடர்பான கொள்கையை எஃப்ஏஎம்சி மறுஆய்வு செய்து வருகிறது.

6. **பொருள்வகை நன்கொடைகள்** - பெறப்பட்ட அனைத்து வகையான நன்கொடைகள் (தங்கம், நகைகள், இயந்திரங்கள் போன்றவை) அவற்றின் தற்போதைய மதிப்புடன் யூனிட்டி ஃபண்டிற்கு தெரிவிக்கப்பட வேண்டும். அவற்றின் மதிப்பிடப்பட்ட / இன்வாய்ஸ் மதிப்பு பேரேட்டில் சேர்க்கப்பட வேண்டும்.

*நன்கொடை சேனல்லிங் குழு - (நரேன் & சந்தீப்)*
மின்னஞ்சல் - dcg@auroville.org.in

---